**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 162** **நாள் : 08.07.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் 17.07.2025 அன்று 6 வார்டுகளில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தன்னார்வலர்கள் மூலமாக இந்த 6 வார்டுகளிலும் வீடு வீடாகச் சென்று 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி நாளை (09.07.2025) தொடங்கி நடைபெறவுள்ளது.**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 15.7.2025 அன்று 6 வார்டுகளிலும், 16.07.2025 அன்று 6 வார்டுகளிலும் நடைபெற உள்ளதை முன்னிட்டு, தன்னார்வலர்கள் மூலம் 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேட்டினை மக்களுக்கு வழங்கும் பணியானது முறையே 07.07.2025 அன்றும், 08.07.2025 அன்றும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 17.07.2025 அன்று “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-32, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-49, அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-80, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-130, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு-184, சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-192 ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தன்னார்வலர்கள் மூலம் 13 அரசுத் துறைகளின் வாயிலாக 43 சேவைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் கையேட்டினை மக்களுக்கு வழங்கும் பணியானது நாளை (09.07.2025) முதல் தொடங்கி நடைபெறும்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**